بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *18/10/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி ஃபஸ்ல் பள்ளிவாசலின் வரலாற்றின் ஒரு சுருக்கம்**

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு நூறாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி நாளை UK ஜமாஅத் ஒரு நிகழ்ச்சி நடத்துகிறது. அதில் அந்நிய விருந்தினர்கள், அண்டை அயலார் போன்றோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு, கிறிஸ்தவர்களின் கோட்டையில் கட்டப்பட்ட, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் பள்ளிவாசல் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்பு உள்ளது. பிறகு இங்கிருந்து இஸ்லாத்தின் உண்மையான போதனையையும், தப்லீகையும் மக்களுக்கு எட்ட வைக்கும் பணி விரிவான முறையில் துவங்கியது.

இன்று நம் எதிரிகள் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆங்கிலேயர்களின் கைகளால் நடப்பட்ட செடி என்று கூறுகிறார்கள். ஆனால், வியப்பு என்னவென்றால், (ஆங்கிலேயர்களின்) கைகளால் நடப்பட்ட இந்தச் செடியின் மூலமாக, மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்களான இந்த மக்களின் மதத்தின் பலவீனத்தை அவர்களது நாட்டில் வெளிப்படுத்திக் காட்டி இஸ்லாத்தின் அழகைப் பற்றி தப்லீக் செய்யப்படுகிறது.

ஃபஸ்ல் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு முன்னர் வோக்கிங்கில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதைக் கட்டியவர், பிரத்தி பெற்ற, கிழக்கத்திய நாடுகளின் ஆய்வாளர் G.W. Leitner ஆவார். இவர் லாஹூரில் ஓரியண்டர் கல்லூரியின் முதல்வராக இருக்கும் போது பணி ஓய்வு பெற்றார். பிறகு இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து 1889 இல் இந்தப் பள்ளிவாசலைக் கட்டினார். இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நிறுவப்பட்ட அதே ஆண்டுதான் என்பதும் ஒரு விந்தையான தற்செயலாகும். 1889 இல் இந்தப் பேராசிரியர் மரணித்து விட்டார். இவ்வாறு இந்தப் பள்ளிவாசலும் மூடப்பட்டது. அந்தப்

பள்ளிவாசலைப் பரமாரிப்பவர் யாரும் இருக்கவில்லை. பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் இதைத் திறக்க வைக்க முயற்சி செய்தார்கள். வெற்றியும் பெற்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு, 'இப்பொழுது இந்தப் பள்ளிவாசலுக்கு ஓர் அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு நான் பொறுப்பாளனாக ஆக்கப்பட்டுள்ளேன்' என்று கடிதம் எழுதினார்கள். பிறகு, மீண்டும் அதில் இபாதத் துவங்கியது.

இந்தப் பள்ளிவாசல் திறக்கப்பட்ட போது, காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களுடன் ஹஸ்ரத் சௌத்ரீ முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் அங்கு சென்றார்கள்; நஃபில் தொழுதார்கள்; நன்றாக துஆக்கள் செய்தார்கள். இதற்கு சில காலங்கள் கழித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முபல்லிக்மார்களை அனுப்பவதற்கான அறிவிப்பை செய்தார்கள். நிதி கிடைக்கமல் இருந்தும், சௌத்ரீ ஃபத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் (ரலி) அவர்கள் இங்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் காஜா சாஹிப் அவர்களுடன் இங்கு பணி புரிந்தார்கள்.

பிறகு, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வஃபாத்துக்குப் பிறகு காஜா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யவில்லை. இதனால் அவர்களை விட்டுவிட்டு சௌத்ரீ ஃபத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் அவர்கள் வேறு இடத்திற்குச் சென்று விட்டார்கள். இது வோக்கிங் பகுதியின் பள்ளிவாசலாக இருந்தது. ஆனால், முறையாக முஸ்லிம் பிரிவுகள் அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத் தரப்பிலிருந்து கட்டப்பட்ட பள்ளிவாசல் ஃபஸ்ல் பள்ளிவாசலே ஆகும். இன்று இங்கிலாந்திலும், லண்டனிலும், மேற்கத்திய நாடுகளிலும்கூட முஸ்லிம்களின் பல்வேறு பள்ளிவாசல்கள் உள்ளன. ஆனால், லண்டனில் முஸ்லிம்களின் முதல் பள்ளிவாசலாக இருக்கும் பெருமை ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கே கிடைத்துள்ளது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசல்கள் ஜமாஅத் மக்களின் சந்தாக்களால், தியாகங்களால் கட்டப்படுகின்றன என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிச்சிறப்பாகும். இப்பொழுதோ இங்கிலாந்திலும் ஜமாஅத்தின் பள்ளிவாசல்கள் டஜன் கணக்கில் கட்டப்பட்டு விட்டன. எவ்வாறாயினும், இன்று ஃபஸ்ல் பள்ளிவாசல் தொடர்பாக நான் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் பரவுவது தொடர்பாக பல விஷயங்களைக் கூறியுள்ளார்கள். இதுதான் நமது மும்முரமான தப்லீக் பணிகளின் அடிநாதமாகும். ஓரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “மேற்கு திசையிலிருந்து சூரியன் உதிக்கும் என்பதன் பொருள், தொன்றுதொட்டே இருளில், நிராகரிப்பில், வழிகேட்டில் உள்ள மேற்கத்திய நாடுகள் உண்மை எனும் கதிரவனால் ஒளியூட்டப்படும் என்பதாகும்.”

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது ஓர் உண்மையான கனவை எடுத்துரைத்த வண்ணம் கூறுகிறார்கள்: “நான் பார்த்தேன், நான் லண்டன் நகரத்தில் ஒரு சொற்பொழிவு மேடை முன் நிற்கிறேன். ஆங்கில மொழியில் மிகவும் ஆதாரப்பூர்வமான முறையில் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துகிறேன். இதற்குப் பிறகு நான் பல பறவைகளைப் பிடித்தேன். அவை சின்னச் சின்ன மரங்களில் உட்கார்ந்திருந்தன. அவை வெள்ளை நிறத்தில் இருந்தன. எனவே, நான் அதற்கு அளித்துள்ள விளக்கம், ‘நான் இல்லை என்றாலும் என்னுடைய நூல்கள் அந்த மக்களிடத்தில் பரவும். நேர்மையான ஆங்கிலேயர்கள் பலர் (இஸ்லாத்தின்) உண்மையால் தாக்கமடைவார்கள்’ என்பதாகும்.”

சௌத்ரீ ஃபத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் (ரலி) அவர்கள் இங்கிலாந்தின் முதல் முபல்லிக் ஆவார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இங்கு முதல் கனியும் வழங்கியுள்ளான். முதல் அஹ்மதி மிஸ்டர் கோரியோ ஆவார். அவர் ஒரு பத்திரிகையாளர் ஆவார். இவருக்குப் பிறகு, ஒரு டஜனுக்கும் கூடுதலான மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சியால் சாஹிப் (ரலி) அவர்களைத் திரும்பி வரவழைத்துக் கொண்டு, காஸீ அப்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்களை முபல்லிஃக் ஆக அனுப்பினார்கள். இவர்களும் சஹாபி ஆவார்கள். இவர்கள் முதல் உலகப்போரில் இங்கு பணி புரிந்தார்கள். அவர்களது காலத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டது. 1917 இல் இருந்து ஜனவரி 1920 வரை ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மத் சாதிக் சாஹிப் அவர்களும் இங்கே முபல்லிக் ஆக பணியாற்றினார்கள்.

1919 இல் சௌத்ரீ ஃபத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் (ரலி) அவர்கள் மறுபடியும் மற்றும் மவ்லவி அப்துர் ரஹீம் நய்யர் சாஹிப் (ரலி) அவர்களும் முபல்லிக் ஆக இங்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இருவரும் தன்னலமற்று பணியாற்றினார்கள்.

1920 இல் ஃபத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள், "பள்ளிவாசல் கட்ட முடிகின்ற வகையில் இங்கிலாந்தில் ஏதாவது நிலம் வாங்குங்கள்" என்று வழிகாட்டல் வழங்கினார்கள். எனவே, 2200 பவுண்டுக்கும் அதிகமான தொகையில் பட்னீ பகுதியில் இந்த இடம் வாங்கப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களுக்கு இதைப் பற்றி தகவல் கிடைத்தபோது, அன்னார் அப்பொழுது டல்ஹவுசியில் இருந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் அங்கு பெரிய விழா நடத்தினார்கள். இந்தப் பள்ளிவாசலுக்கு 'மஸ்ஜித் ஃபஸ்ல் (ஃபஸ்ல் பள்ளிவாசல்)' என்று பெயரையும் நிர்ணயித்தார்கள். பிறகு இந்தப் பள்ளிவாசல் கட்டுவதற்காக சந்தா அறிவிக்கப்பட்டது.

1924 இல் வெம்ப்லியில் நடைபெற்ற சமயங்களுக்கான கண்காட்சிக்காக அப்துர் ரஹீம் நய்யர் சாஹிப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் போதனையை எடுத்துரைப்பதற்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் காதியானுக்குத் தகவல் கொடுத்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இதை ஏற்றுக் கொண்டவாறு இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதற்காக நூல் ஒன்றை எழுதினார்கள். இது "அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம்" (அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாம்) என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

இந்த மாநாட்டுக்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் தாமே அதில் கொள்ளவதாக முடிவானது. எனவே, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் மற்றும் எகிப்து வழியாகச் சென்று, இத்தாலி, ஸ்விட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் வழியாக 22 ஆகஸ்ட் 1924 அன்று இங்கிலாந்துக்கு வந்துசேர்ந்தார்கள். இங்கு செயின்ட் பால் சர்ச்சுக்கு முன்னால் நின்று கொண்டு, ஹுஸூர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் வெற்றிக்காக துஆ செய்தார்கள். பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் நகரத்திற்குள் நுழைந்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் வந்து தங்கியிருந்ததற்கு, இங்குள்ள அச்சகத்தில், பல்வேறு காரணங்கள் அடிப்படையில் மிக அதிகமாக கவரேஜும் கிடைத்தது.

பள்ளிவாசல் கட்டும் விஷயத்தில் எல்லாவற்றுக்கும் முதலான கட்டம் பணம் கிடைத்ததாகும். அது எவ்வாறு நிகழ்ந்தது என்றால், போர் முடிந்ததும் பவுண்டு மதிப்பு வீழ்ச்சியடையத் துவங்கி விட்ட ஒரு காலம் வந்தது. இந்த சந்தர்ப்பத்தில் 1920 இல் ஹுஸூர் (ரலி) அவர்களின் வழிகாட்டலின் பேரில் முதலில் 30,000 ரூபாய் வரை, பிறகு ஒரு லட்சம் ரூபாய் திரட்டுவதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டது.

ஜமாஅத் மக்கள் இந்தத் திட்டத்துக்கு முழுமையான முறையில் செவிசாய்த்தார்கள். (ஏறத்தாழ 52,000 ரூபாய் சேர்ந்திருந்தது.) இந்தத் தொகை பேங் ஆஃப் இந்தியா மூலமாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. (இந்திய ரூபாய்களான) இந்தத் தொகையை வைத்து 3468 பவுண்டுகள் பெறப்பட்டன.

19 அக்டோபர் 1924 இல் ஞாயிற்றுக் கிழமை அன்று இந்தப் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், தலைவர்கள், அரசியல்வாதிகள், அரசியல் நிபுணர்கள் ஆகியோர் உட்பட பல மக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. குறைவான நேரமே இருந்ததனால், குறைவான மக்களே வருவார்கள் என்று கருதப்பட்டது. ஆனால் பெரும் எண்ணிக்கையில் விருந்தினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி முற்றிலும் வெற்றிகரமானதாக இருந்தது.

அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியின் துவக்கத்தில் ஹஸ்ரத் ஹாஃபிஸ் ரோஷன் அலீ சாஹிப் அவர்கள் திலாவத் செய்தார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் உரையாற்றினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மேலான இறைவனை வணங்க விரும்பும் ஒவ்வொருவருக்காவும் இஸ்லாமிய பள்ளிவாசல்களின் கதவு திறந்திருக்கிறது என்பது திருக்குர்ஆனின் கட்டளை மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அமலிலிருந்தும் நிரூபணமாகிறது.

இஸ்லாமிய பள்ளிவாசல்கள் பல்வேறு மதங்களின் மக்களை ஒன்று திரட்டுவதற்கான மையப் புள்ளியாகும். இதே உணர்வுகளுடன் நாங்கள், அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத் இந்தப் பள்ளிவாசலைக் கட்ட நினைத்திருக்கிறோம். அன்னார் கூறினார்கள்: நான் இந்தப் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டுவதற்கு முன்னால் இந்தவொரு விஷயத்தை அறிவிக்க விரும்புகிறேன்: மேலான இறைவனை வணங்குவதற்காக மட்டுமே பள்ளிவாசல் கட்டப்படுகிறது.

அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பள்ளிவாசல் திறக்கப்பட்டது. இதைத் திறந்து வைப்பதற்காக இளவரசர் ஃபைசல் வர இருந்தார். அவர்தந்தை அவரை செல்லுங்கள் என்று சொன்னார். ஆனால் முஸ்லிம்களுடைய எதிர்நடவடிக்கையின் காரணமாக அரசர் அவரைத் தடுத்துவிட்டார்.

பிறகு ஷேக் அப்துல் காதிர் சாஹிப் இதைத் திறந்து வைத்தார். அவர் மிகத் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறினார்: “நான் அஹ்மதி அல்ல; ஆனால், நாம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்ய விரும்புகின்றோம் என்பதனால், நாம் இந்தக் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாறப்பட்டு ஒருவர் மற்றவருக்கு உதவி புரிய வேண்டும்.” இது ஷேக் அப்துல் காதிர் சாஹிப் அவர்களின் துணிச்சல் மற்றும் பரந்த மனப்பான்மையாகும். மேலான அல்லாஹ் இதற்கும் அவருக்கு நற்கூலி வழங்குவானாக!

நான் எடுத்துக் கூறிய இதுதான் ஃபஸ்ல் பள்ளிவாசலின் சுருக்கமான வரலாறாகும். மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் பரவ வேண்டும் என்பதே இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான காரணமாக இருந்தது. இன்று நாம் நூறாண்டு நிறைவடைந்ததை ஒட்டி நிகழ்ச்சி நடத்துகின்றோம். ஆனால், இது ஒன்றும் உலக நிகழ்ச்சி அல்ல. இந்தப் பள்ளிவாசல் அல்லாஹ்வை வணங்குவதற்காக மக்கள் ஒன்று கூடக்கூடிய இடமாகும். மக்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும். ஒருவர் மற்றவருக்கான உரிமைகளை செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். தம்மை ஆன்மிக முறையில் சீர்திருத்திக் கொள்ளவும் வேண்டும். தம்முடைய நல்லொழுக்கங்களையும் உயர்த்த வேண்டும்.

இன்று நாம் மேலான அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்தக்கூடியவர்களாக ஆவதற்கும், அல்லாஹ்வின் கட்டளைகள்படி நடக்கக்கூடியவர்களாக ஆவதற்கும், அவனுடைய படைப்பினங்களுக்கான உரிமையை நிலைநாட்டக்கூடியவர்களாக ஆவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு நடந்தால்தான் நம்மால் இந்த உலகை அமைதியான, பாதுகாப்பான தொட்டிலாக ஆக்க முடியும். மேலான அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)